RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 92 | ஏப்ரல்.10 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவை உடைக்க ஒரு ‘பி’ டீமை ஸ்டாலின் உருவாக்கினார்” : இபிஎஸ்

சென்னை: ஏப்.10-

“ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவை உடைக்கலாம், முடக்கலாம் என்று நினைத்து ஒரு ’பி’ டீமை உருவாக்கி நீங்கள் (மு.க.ஸ்டாலின்) சதித் திட்டம் தீட்டினீர்கள். அத்தனையையும் நாங்கள் முறியடித்தோம்” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ஆயிரம் விளக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் வளர்மதியை ஆதரித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியது: “இந்த தேர்தல் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டும் தேர்தல். வாரிசு அரசுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தேர்தல். சீர்காழியில் இபிஎஸ்ஸை துடைத்து எறிய வேண்டும் என்று பேசி இருக்கிறார். அதிமுக என்பது 2 கோடி தொண்டர்கள் நிறைந்த கட்சி.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுகவை உடைக்கலாம், முடக்கலாம் என்று நினைத்து ஒரு ’பி’ டீமை உருவாக்கி நீங்கள் சதித் திட்டம் தீட்டினீர்கள். அத்தனையையும் நாங்கள் முறியடித்தோம். எத்தனை வழக்குகள்? இப்போது பி டீம் எங்கு போனார்கள்? குப்பைக்கு போய் விட்டார்கள். அதுதான் சரியான வார்த்தை.

அவருக்கு என்ன அடையாளம் கொடுத்தோம், எவ்வளவு பொறுப்பை ஜெயலலிதா கொடுத்தார். அதை எல்லாம் மறந்து சுயநலவாதியாகிவிட்டார். அப்படிப்பட்ட துரோகிகள் எல்லாம் அதிமுகவில் இருந்து துடைத்து எறியப்பட்டார்கள். இப்போது அதிமுக புனிதமாக இருக்கிறது.

கட்சிக்குள் யார் யாரெல்லாம் குடைச்சல் கொடுத்தார்களோ, அத்தனையும் இன்று ஆண்டவன் அருளாலும், இரு பெரும் தலைவர்களின் அருளாலும் துடைத்து எறிந்து விட்டோம். அதிமுக மேலும் ஜெட் வேகத்தில் சென்றுகொண்டு இருக்கிறது. திமுக கூட்டணி தொடங்கி காங்கிரஸ், திமுக 20 நாட்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். இவர்களை மாற்றி அவர்களும், அவர்களை மாற்றி இவர்களும் குறை பேசிக்கொண்டிருந்தார்கள்.



அதிமுக அப்படியா இருந்தது?

திமுக தேர்தல் அறிக்கையை அதிமுக காப்பி அடித்தது என்று ஸ்டாலின் பேசுகிறார். யார் முதலில் தேர்தல் அறிக்கையை வெயிட்டது? அப்படியென்றால் யார் காப்பி அடித்திருப்பார்கள்? நாம் தேர்தல் அறிக்கை வெளியிட்டு 10 நாட்களுக்குப் பிறகு தான் திமுக தேர்தல் அறிக்கை வெளியிட்டது. நமது தேர்தல் அறிக்கையை திமுகதான் காப்பி அடித்தது. அதை அப்படியே உருட்டிப் பேசுகிறார் ஸ்டாலின்.

அதிமுக அரசை விட இன்று திமுக ஆட்சியில் கூடுதலாக ஒரு லட்சத்து 36 ஆயிரம் கோடி கூடுதல் வருமானம் வருகிறது. கடன் 5 லட்சம் கோடி வாங்கி இருக்கிறீர்கள் பெரிய திட்டம் ஏதும் இல்லை. என்ன திட்டம் செய்தீர்கள்? அதிமுக ஆட்சியில் சென்னை மக்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, மெட்ரோ 2ம் கட்டம் திட்டம் கொண்டு வந்தோம்.

63 ஆயிரம் கோடிக்கு அனுமதி வாங்கி, மத்திய அமைச்சரை அழைத்து வந்து கலைவாணர் அரங்கில் அடிக்கல் நாட்டிய பெரும் அதிமுகவை சேரும். இந்தியாவிலேயே ஒரு திட்டத்திற்கு 63 ஆயிரம் கோடி நிதியை பெற்ற அரசு அதிமுக அரசு. உங்களால் இப்படி ஒரு திட்டத்தை பெற முடிந்ததா..?

அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் தரமான பொருட்கள் அம்மா உணவகத்திற்கு கொடுக்கப்பட்டு, மக்களுக்கு ருசியான உணவு கொடுக்கப்படும். தரமான அம்மா உணவுகத்தில் குறைந்த விலையில் உணவு கொடுப்போம். மூடப்பட்ட அம்மா உணவகங்கள் அத்தனையும் திறக்கப்படும். நானே நேரடியாக கண்காணிப்பேன்.

மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை, பெண்கள், மூதாட்டிகளுக்கு கூட பாதுகாப்பு இல்லை, 2 வயது சிறுமிகளுக்கு கூட இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை. 5 ஆண்டுகளில் 6999 போக்சோ வழக்குகள், 18 ஆயிரம் பாலியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஆட்சி தேவையா?

எங்கு பார்த்தாலும் கஞ்சா விற்பனை, கிராமம் முதல் நகரம் வரை பட்டிதொட்டி எங்கும் கஞ்சா விற்பனை. கஞ்சா போதை ஆசாமிகளால் கொலை, கொள்ளை திருட்டு நடக்காத நாளே இல்லை. ஏன் என்றால் அதை விற்பதே திமுக நிர்வாகிகள் என்று தான் சொல்கிறார்கள். அதனால் தான் இந்த கஞ்சாவை கட்டுப்படுத்த முடியவில்லை. அதிமுக ஆட்சி அமைந்த பின் மூன்றே மாதங்களில் தமிழ்நாடு முழுவதும் கஞ்சா விற்பனை முற்றிலும் ஒழிக்கப்படும். சட்டத்தின் ஆட்சி நடக்கும்.

திமுக ஆட்சியில் 5 லட்சம் கோடி கடன் வாங்கி இருக்கிறார்கள். அதை யார் கட்டுவது, நீங்கள் தான் கட்டவேண்டும். இந்த ஆட்சியின் சாதனை நம்மை எல்லாம் கடன்காரர்களாக்கியது மட்டும்தான். அதிமுக ஆட்சியில் இருந்ததை விட திமுக ஆட்சியில் வருமானம் கூடுதலாக இருந்தும் ஏன் கடன் வாங்குனீர்கள்? அதெல்லாம் எங்கு போய் சேரணுமோ, பணம் அங்கு போய் சேர்ந்து விட்டது. இதை எல்லாம் அதிமுக அரசு வந்ததும் தோண்டியெடுத்து மக்களிடம் தெளிவுபடுத்துவோம்.

திமுக ஆட்சிக்கு வந்து ஐந்தரை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு தருவதாக சொன்னார்கள், காலி பணியிடங்களை இது வரை நிரப்பினார்களா என்று பார்த்தால் 94 ஆயிரம் பேர் தான் நிரப்பி இருக்கிறார்கள். 5 ஆண்டுகளில் பணி ஒய்வு பெற்றவர்கள் 1 லட்சம் பேர். ஆனால், பணி நியமனம் 94 ஆயிரம். அதிலும் 6 ஆயிரம் பாக்கி. அப்போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றினார்களா?

நீட் தேர்வு ரத்து என்றார்களே செய்தார்களா? தேர்தல் நேரத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றினார்களா..? மாதம்தோறும் கேஸ் சிலிண்டருக்கு 100 ரூபாய் மானியம் கொடுத்தார்களா..? பெட்ரோல், டீசல் விலை குறைப்பு என்றார்கள், குறைத்தார்களா..? கல்விக்கடன் மாணவர்களுக்கு ரத்து செய்தார்களாஞ்? ஒன்றும் செய்யவில்லை.

மக்களை ஏமாற்றி புதிதாக ஒரு அறிவிப்பு. கூப்பன் கொடுப்பார்களாம், கூப்பன் யார் கொடுப்பார்கள்? திமுக ஆட்சிக்கு வருவது 100 சதவீதம் முடியாது. ஆனால் அந்த அறிவிப்பில் கூட திமுக குடும்பத்திற்கு என்ன வருமானம் என பார்த்து தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். கூப்பன் கொடுத்தால்தானே கமிஷன் கிடைக்கும். நேரடியாக வங்கிக்கு அனுப்பினால் கிடைக்குமாஞ்?’’ என்று பழனிசாமி பேசினார்.



## “எனக்கு நிதிஷ் குமார் நிலை ஏற்படாது” : புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி உறுதி

புதுச்சேரி: ஏப்.10-

“எனக்கு நிதிஷ் குமார் நிலை ஏற்படாது” என்று புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி உறுதிபட தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இன்று காலை தொடங்கி நடைபெற்றது. தனது தொகுதியில் வாக்களித்த பிறகு முதல்வர் ரங்கசாமி தொகுதி வாரியாக சென்று பார்வையிட்டு அங்குள்ள நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து மங்கலம் தொகுதியில் டீக்கடைக்கு சென்ற முதல்வர் ரங்கசாமி டீ மற்றும் அதிரசம் சாப்பிட்டுக் கொண்டே பொதுமக்களிடம் பேசினார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கலந்துரையாடினார்.

வாக்குப் பதிவு அதிகரித்துள்ளது யாருக்கு சாதகமாக இருக்கும் என நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, ”மக்கள் விழிப்புணர்வுடன் அதிகளவில் வாக்களிக்கின்றனர். மக்கள் நலத் திட்டங்கள் அவர்களுக்கு சென்றடைந்துள்ளதும் ஒரு காரணம். நாங்கள் ஆட்சிக்கு திரும்ப வர வேண்டும் என்றுதான் வாக்களிக்கிறார்கள். கிராமத்தில் விழிப்புணர்வு அதிகம் இருக்கும். கிராமங்களில் வாக்களிப்பு அதிகமாக உள்ளதும் இதற்கு ஒரு காரணம்” என்று முதல்வர் ரங்கசாமி கூறினார்.

நீங்கள் பிரச்சாரத்துக்கு வந்தபோது கிராமத்தில் தானே உங்களிடம் அதிகம் கேள்வி கேட்டார்கள் என்று கேட்டதற்கு, ”ஆமாம். நான் செய்வதால் என்னிடம் கேட்டார்கள். கடந்த மக்களவைத் தேர்தலின்போது ரேஷன் கடைகளை திறந்து அரிசி, கோதுமை கேட்டார்கள், நானும் ரேஷன் திறந்து இலவச அரிசி, கோதுமை தந்தேன். தற்போதும் தங்கள் தேவைகளை என்னிடம் கேட்டார்கள். நான் செய்வேன் என்பதும் அவர்களுக்கு தெரியும்” என்று முதல்வர் கூறினார்.

இம்முறை எத்தனை இடங்கள் வெல்வீர்கள் என்ற கேள்விக்கு, “ஆட்சியமைக்கும் அளவுக்கு தேர்தலில் வெல்வோம்” என்று முதல்வர் ரங்கசாமி கூறினார்.

நிதிஷ் குமாரின் நிலைதான் உங்களுக்கு ஏற்படும் என்கிறார்களே என்று எதிர்க்கட்சியினர் கூறுவது குறித்த கேள்விக்கு, ”அதுபோன்ற நிலை ஏற்படாது. என் தலைமையில் ஆட்சி அமையும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைச் செய்வார்கள். மத்திய அரசு உடன் இணக்கமாக இருந்து பல திட்டங்கள் செயல்படுத்தி உள்ளோம்” என்று முதல்வர் கூறினார்.

கூட்டணிக் கட்சி தொகுதிகளுக்கு ஏன் பிரச்சாரம் செல்லவில்லை என்ற கேள்விக்கு, “கூட்டணிக் கட்சியில் பெரியத் தலைவர்கள் பிரச்சாரத்துக்கு வந்தார்கள். நான்தான் என் கட்சிக்கு பிரச்சாரத்து செல்ல வேண்டும். நாட்களும் குறைவாக இருந்தது. ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை இலக்காக வைத்துதான் நாங்கள் அனைவரும் பிரச்சாரம் செய்தோம்” என்று ரங்கசாமி கூறினார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## ‘நாட்டில் வேறு பிரச்சினையே இல்லையா?’ திருப்பரங்குன்றம் குறித்த வழக்கு ஒன்று ரூ.50,000 அபராதத்துடன் தள்ளுபடி

மதுரை: ஏப்.10-

திருப்பரங்குன்றம் மலைக்கு பக்தர்களை அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மதுரையைச் சேர்ந்த கே.கே.ரமேஷ், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இந்துக்கள் தீபம் ஏற்றி வழிபாடு நடத்த அதிகாரிகள் அனுமதி வழங்குவதில்லை. ரம்ஜான் பண்டிகையின்போது இஸ்லாமியர்கள் மலை மேல் சென்று வழிபட அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர்.

இதனால் திருப்பரங்குன்றம் மலையில் இந்துக்களை அனுமதிக்கக் கோரி அதிகாரிகளுக்கு மனு அனுப்பினேன். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, மலைக்கு செல்லவிடாமல் இந்துக்களை தடுக்கும் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் சென்று தீபம் ஏற்றி வழிபாடு நடத்த அனுமதி வழங்கவும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ‘நாட்டில் திருப்பரங்குன்றத்தை



தவிர வேறு பிரச்சினையே இல்லையா? திருப்பரங்குன்றம் தீப விவகாரம் தொடர்பாக எத்தனை வழக்குகள்தான் தாக்கல் செய்வீர்கள்? நீதிமன்றத்துக்கு வேறு வேலையில்லையா? இந்த மனுவை விசாரணைக்கு எடுக்க மனுதாரர் ரூ.10 லட்சத்தை கோயில் கணக்கில் வைப்பு நீதியாக செலுத்த வேண்டும். அப்படி பணம் செலுத்தினால் விசாரணைக்கு எடுக்கப்படும்’ என்றனர்.

மத்திய அரசின் உதவி சொலிசிட்டர் ஜெனரல் கோவிந்தராஜன் ஆஜராகி, ‘மனுதாரர் இதே வேலையாக தான் இருக்கிறார். இதனால் அரசுக்கு மிகப் பெரிய இழப்பீடு ஏற்படுகிறது. மாநில அரசு வழக்கறிஞர்கள் கட்டணம், மத்திய அரசின் வழக்கறிஞர் கட்டணம் என மனுதாரரின் வழக்குக்காக மட்டும் பல லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது. எனவே இந்த மனுவை சாதாரணமாக தள்ளுபடி செய்தால் மீண்டும் மீண்டும் இதே கோரிக்கையுடன் மனு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. எனவே அதிகபட்ச அபராதம் விதித்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்’ என்றார்.

தமிழக அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரல் ரவீந்திரன் வாதிடுகையில், ‘மனுதாரர் இதே வேலையாகவே உள்ளார். இதே போன்ற கோரிக்கையுடன் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுபடியாகியுள்ளது. எனவே மனுதாரருக்கு அதிகபட்ச அபராதம் விதித்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்’ என்றார்.

இதையடுத்து, ரூ.5 லட்சம் அபராதம் விதித்து மனுவை தள்ளுபடி செய்தாக நீதிபதிகள் தெரிவித்தனர். தொடர்ந்து மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், ‘அபராதத் தொகையை எங்களால் கட்ட முடியாது. இனிமேல் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்யமாட்டோம். அபராதம் விதிக்க வேண்டாம்’ என்றார். இதற்கு மத்திய, மாநில அரசு வழக்கறிஞர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

பின்னர் நீதிபதிகள், ரூ.50 ஆயிரம் அபராதம் விதிப்பதாக கூறினர். இதற்கு மனுதாரர் தரப்பில், இந்தத் தொகையும் மனுதாரரால் கட்ட முடியாது. நீதிமன்றம் கருணை காட்ட வேண்டும். மனுவை திரும்பப் பெற்றுக் கொள்கிறோம் என வேண்டுகோள் வைக்கப்பட்டது.

தொடர்ந்து நீதிபதிகள், ‘மனுதாரர் ஊடகங்களில் தனது பெயர் வர வேண்டும் என்ற நோக்கில் இதுபோன்று மனுக்களை தொடர்ந்து தாக்கல் செய்வது தெரிய வருகிறது.

இனிமேல் இதுபோன்ற தேவையற்ற மனுக்களை பொதுநல வழக்காக தாக்கல் செய்ய மாட்டேன் என அவர் நீதிமன்றத்தில் உறுதிமொழி பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். அப்படி தாக்கல் செய்தால் அபராதத்தை திரும்ப பெறவது குறித்து பரிசீலிக்கப்படும். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது’ என உத்தரவிட்டனர்.

## தமிழகத்தில் 7 இடங்களில் சதம் அடித்த வெயில்

சென்னை, ஏப்.10-

தமிழகத்தில் இந்த ஆண்டு பிப்ரவரி கடைசியில் இருந்தே வெயில் உக்கிரம் காட்ட தொடங்கிவிட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது கோடை காலம் தொடங்கி வறுத்தெடுத்து வருகிறது. எல்நினோ தாக்கத்தால் இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் சற்று அதிகமாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மார்ச் முதல் வாரத்திலேயே தமிழ்நாட்டில் சில இடங்களில் வெயில் 100 டிகிரியை தொட



ஆரம்பித்துவிட்டது. வழக்கமாக வெயில் உக்கிரம் காட்டும் இடமான வேலூரில்தான் இந்த ஆண்டும் வெயில் முதலில் 100 டிகிரியை தொட்டது. இதன் தொடர்ச்சியாக தற்போது உள் மாவட்டங்களிலும் வெப்பம் வாட்டி வதைக்க ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் இன்று தமிழகத்தில் 7 இடங்களில் வெயில் சதமடித்துள்ளது.

அதிகபட்சமாக கரூர் பரமத்தியில் 105.8 (41 செல்சியஸ்) பாரன்ஹீட் வெப்பம் பதிவாகியுள்ளது.

மேலும் வெயில் சதமடித்த இடங்களின் விவரம் வருமாறு:

கரூர் பரமத்தி 105.8 டிகிரி (41 செல்சியஸ்)

ஈரோடு 104 டிகிரி (40 செல்சியஸ்)

வேலூர் 102.74 டிகிரி (39.3 செல்சியஸ்)

நாமக்கல் 102.02 டிகிரி (38.9 செல்சியஸ்)

மதுரை விமான நிலையம் 101.12 டிகிரி (38.4 செல்சியஸ்)

திருப்பத்தூர் 101.84 டிகிரி (38.8 செல்சியஸ்)

பாளையங்கோட்டை 101.48 டிகிரி (38.6 செல்சியஸ்)





## குன்னூர் சட்டமன்ற தொகுதியில் மக்கள் மனதில் என்றென்றும் நீங்காத இடம்பிடித்த குன்னூர் அதிமுக வேட்பாளர் சாந்திராமு

குன்னூர், ஏப்.10-

நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் சாந்திராமு மிக சிறப்பாக பணியாற்றகூடியவர். குன்னூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். சிறந்த சமூக சேவகர் கடந்த கொரோனா காலத்தில் பொது மக்களுக்கு காய்கறிகள், மளிகை பொருட்கள், அனைத்தும் தனது சொந்த செலவில் வழங்கி சிறப்பாக பணியாற்றி பொது மக்களின் பாராட்டுதல்களை பெற்றார்.

பொது மக்களுக்கு தொடர்ந்து மருத்துவ உதவிகள் வழங்கிவருகிறார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும், இல்லாத காலத்திலும்,

பொது மக்களுக்கு இவர் செய்த உதவி பொது மக்களிடையே மிகப்பெரிதும் பாராட்டுதல் பெற்றதுடன் பொது மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்தார்

தற்போது குன்னூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் சாந்திராமு குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு செல்லும் இடமெல்லாம் பொது மக்கள் உற்சாக வரவேற்பை அளித்து வருகிறார்கள்.



## திருவையாறு வட்டாரத்தில் 100% வாக்களிப்போம் உறுதிமொழி ஏற்பு

தஞ்சாவூர், ஏப்.10-

2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழானது மாவட்ட ஆட்சியர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திருமதி. அருண்மொழி அவர்களின் வழிகாட்டுதலின் நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களை கொண்டு 100% வாக்களிப்பதன் முக்கியத்துவம், எனது வாக்கு எனது உரிமை, தேர்தல் குறித்த விளக்க உதவி எண் 1950 ஆகிய பல்வேறு விழிப்புணர்வுகளை மையமாக வைத்து திருவையாறு வட்டாரத்தில் மகளிர் திட்டம் உதவி திட்ட அலுவலர் திருமதி. தில்லை மணி அவர்களது தலைமையில் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்வில் வட்டார இயக்க மேலாளர் சுதா, வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் சரிதா, ஆர்த்தி, குணசெல்வி, திலகவதி மற்றும் சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



## அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.10-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனத்திற்கு புழல் ஒன்றியம் அழிஞ் சிவாக்கம் ஊராட்சியில் முன்னாள் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ஆஷாகல்விநாதன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் கல்விநாதன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சிவகுமார், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் முரளி மற்றும் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் இணைந்து வீடு வீடாக சென்று திமுக செய்துள்ள சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வாக்காளர்கள் இடம் வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பொது தேர்தல் 2026 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக பல்வேறு விழிப்புணர்வு மாவட்ட ஆட்சித் தலைவர்ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது




தேனி, ஏப்.10-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம், கருவேல்நாயக்கன்பட்டி கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன வளாகத்தில் வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக வாக்காளர் உறுதிமொழி ஏற்பு, கையெழுத்து இயக்கம் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணிகள், கையெழுத்து இயக்கம், சுவரொட்டி விளம்பரம், துண்டுப்பிரசுரம் வழங்குதல், ரங்கோலி, நடைபயணப் பேரணி, மனித சங்கிலி, தெருநாடகம், விளம்பரப் பதாகைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம், கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன வளாகத்தில், வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் சுயதொழில் பயிற்சி பெறும் வாக்காளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்துவாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கையெழுத்திட்டு, தொடங்கி வைத்து, அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்ய வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர், தேர்தல் நாள் குறித்து வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கனராவங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறும் சுமார் 170க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் 23.04.2026 என்ற மனித வடிவத்தில் நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

முன்னதாக வாக்களிப்பதன் அவசியம் குறித்து, முதல்தலைமுறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. மேலும், வாக்களிப்பதன் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய செல்ஃபிபாயண்ட் (Selfie Point)இல் வாக்காளர்கள் செல்ஃபி எடுத்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன், முன்னோடி வங்கி மேலாளர் கார்த்திகேயன், வட்டாட்சியர் (தேனி) .சதீஸ்குமார், கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் ரவிக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நுண் பார்வையாளர்களுக்கான (Micro Observer) பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்றது. அருகில், கூடுதல் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் .இரா.ஜெயபாரதி , மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரா.சிவக்குமார் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஜெயந்தி ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி வி. மாதே பள்ளி ஊராட்சி முஸ்லிம்பூர் கிராமத்தில் அதிமுக துணை பொதுச் செயலாளர் வேப்பனப்பள்ளி தொகுதி அதிமுக வேட்பாளர் கே. பி.முனுசாமி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் பரிதா நவாப் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.




■ நிலக்கோட்டை அதிமுக வேட்பாளர் எஸ் தேன்மொழி சேகர் மாரியம்மன் கோவிலில் இருந்து தனது பிரச்சார பயணத்தை தொடங்கினார் கிழக்கு ஒன்றிய செயலாளர் யாகப்பன் மேற்கு ஒன்றிய செயலாளர் நல்லதம்பி முன்னாள் எம்பி உதயகுமார் நிலக்கோட்டை நகர செயலாளர் வி எஸ் எஸ் சேகர் வத்தலக்குண்டு ஒன்றிய செயலாளர் அண்ணன் களஞ்சியம் வத்தலகுண்டு ஒன்றிய செயலாளர் சுதாகர் வத்தலகுண்டு நகர செயலாளர் பீர் முகமது மற்றும் பலர் கலந்து கொண்டனர்



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் அதிமுக மாவட்ட செயலாளர், கிருஷ்ணகிரி தொகுதி அதிமுக வேட்பாளர் அசோக் குமார் எம் எல் ஏ வை ஆதரித்து இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார் வரவேற்று, காவேரிப்பட்டினம் நகரப் பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். ஒன்றிய செயலாளர் பையூர் ரவி, நகர செயலாளர் விமல், பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## செங்கல்பட்டு தொகுதி திமுக வேட்பாளர் எம் கே டி கார்த்திக் தண்டபாணிக்கு கிரேன் மூலம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மிக சிறப்பாக வரவேற்பளிக்கப்பட்டது

செங்கல்பட்டு ஏப். 10-

செங்கல்பட்டு மாவட்டம்தொகுதியில் போட்டியிடும் நந்திவரம் கூடுவாஞ் சேரி நகராட்சியை சேர்ந்த எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி செங்கல்பட்டு தொகுதியில் உள்ள திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு திரட்டினார். இதனையடுத்து காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மண்ணிவாக்கம் வண்டலூர், உனைமாஞ் சேரி நெடுங்குன்றம் ஆகிய ஊராட்சிகளில் காலை முதல் இரவு வரை வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்போது திமுக அரசின் சாதனைகள் மற்றும்



பல்வேறு நலத்திட்டங்களை குறித்து எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் அப்போது வேட்பாளர் எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணிக்கு திமுக மற்றும் கூட்டணி கட்சி சேர்ந்த நிர்வாகிகள்மேளதாளங்கள் முழங்க சால்வை மற்றும் மாலை அணிவித்து பட்டாசு வெடித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர் அதனைத் தொடர்ந்து நெடுங்குன்றம் ஊராட்சியில் ஒன்றியக்குழு பெருந்தலைவர் உதயாகருணாகரன் தலைமையில் கரகாட்டம் ஒபிலாட்டம், தப்பாட்டம் உட்பட பல்வேறு ஆடல் பாடலுடன் கிரேன் மூலம் ராட்சத மாலை மற்றும் சாக்லேட் மாலை அணிவித்தனர். அப்போது அங்கு திரண்டு இருந்த மக்களுடன் எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி செல்பி எடுத்துக்கொண்டார்.இதில் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன், ஊராட்சி மன்ற தலைவர்கள் மண்ணிவாக்கம் கெஜலட்சுமி சண்முகம், நெடுங்குன்றம் வனிதா சீனிவாசன், ஊரப்பாக்கம் பவானிகார்த்தி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் வண்டலூர் குணசேகரன், துணைத் தலைவர்கள் சுமதி லோகநாதன், கவிதா சத்யநாராயணன், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.கார்த்திக் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் வார்டு உறுப்பினர்கள் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## தாம்பரம் தொகுதி மக்களுக்கு ஊழல் இல்லாத நிர்வாகம் அமைக்கப்படும் தவெக வேட்பாளர் கில்லி டி.சரத் குமார் வாக்குறுதி

தாம்பரம் ஏப். 10-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மாடம்பாக்கம் பகுதியில்

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் பரப்புரை பிரச்சாரம் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது அந்த வகையில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர் கில்லி டி.சரத்குமார் தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட ராஜகீழ்பாக்கம், மாடம்பாக்கம், அகரம் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று விசில் சத்தம் மேலதாலமுடன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அப்பகுதி பொது மக்கள் அவரை மிகுந்த உச்சாகத்துடன் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர் அதன் பின்பு பேசிய இந்த தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்ற உடன் தாம்பரம் தொகுதியில் தடைபட்டு இருக்கு பாதாள சாக்கடை திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவேன் எந்த விதமான மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் மற்றும் போதிய மருத்துவர்கள் இல்லாமலும் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனை நாடும் நிலைதான் தற்போது நிலவி வருகிறது இதனை முற்றிலும் மாற்றி அமைக்கப்படும், தொகுதியில் உள்ள ஏரிகளில் கழிவு நீர் கலப்பதை தடுத்து நிறுத்தப்பட்டு சுற்று சூழல் காக்கப்படும் அரசு பள்ளிகளில் போதிய கழிப்பிடங்கள் இல்லை, மாணவர்கள் பயன்படுத்து விளையாட்டு இல்லை அதனை உடனே நிறைவேற்றப்படும் என தெரிவித்தார்.

## வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் தீவிர வாக்கு சேகரிப்பு



மாதவரம், ஏப்.10-

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மோரை, பாலவேடு, ஆலத்தூர், அரக்கம்பாக்கம், வெள்ளச்சேரி, பாண்டேஸ்வரம், கர்லபாக்கம் உள்ளிட்ட ஊராட்சிகளில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் மோரை கோ.தயாளன் தலைமையில் திமுக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ லியோனி வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். அப்போது மோரை ஊராட்சி அண்ணா நகரில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் செள.சதீஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மோரை மு.சதிஷ்குமார், மோரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆர்.திவாகரன், தாய் மூகாம்பிகை நகர் கிளைச் செயலாளர் ஆனந்தன், அன்பழகன், தமிழ்நாடு காவலர் படை பகுதியில் சதிஷ், புதிய கன்னியம்மன் நகரில் கிளைச் செயலாளர் சரவணன், ஒன்றிய சிறுபான்மைப் பிரிவு துணை அமைப்பாளர் பாஷா, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்திக், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் செளந்தர்யா, பாலவேடு ஊராட்சி ஒன்றிய பொருளாளர் அ.சிவானந்தம், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் க.ரவிக்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாலவேடு தே.இளம்பரிதி, ஆலத்தூர் ஊராட்சியில் ஒன்றிய அவைத்தலைவர் ஏழுமலை, ராஜா, அரக்கம்பாக்கம் ஊராட்சியில் அயலக அணி மாவட்ட அமைப்பாளர் கோவிந்தராஜ், ஒன்றிய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஓம் பிரகாஷ், வெள்ளச்சேரி ஊராட்சியில் மாவட்ட பிரதிநிதி பொன்.மதுரை முத்து, பாண்டேஸ்வரம் ஊராட்சியில் சிவா, கர்லபாக்கம் ஊராட்சியில் மாவட்ட துணைச் செயலாளர் மு.ராசேந்திரன் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு பட்டாசு வெடித்து பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து மலர்கள் தூவி ஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். இதில் தேமுதிக மாவட்ட செயலாளர் டில்லி, காங்கிரஸ் மாவட்டத் தலைவர் காங்கை குமார், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் இளங்கோவன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் ஆசீர்வாதம் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்க கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்த உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணியை, பர்கூர் தொகுதி வேட்பாளர் மதியழகன் சால்வை அணிவித்து வரவேற்றார். ஊத்தங்கரை தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் குப்புசாமி, மாவட்ட அவை தலைவர் நாகராஜ், திமுக சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பார். இளங்கோவன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.




## பழனி மாவட்ட தலைமை அரசு மருத்துவ மனையில் ஆம்புலன்ஸ்கே இடையூறாக நிறுத்தப்படும் டூவீலர் வாகனங்கள்

பழனி, ஏப்.10-

பழனி மாவட்டத்தின் மிக முக்கியமான சிகிச்சை மையமான அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். இந்நிலையில், மருத்துவமனையின் அவசரப் பிரிவு மற்றும் ஆம்புலன்ஸ் வந்து செல்லும் பாதைகளில் பொதுமக்கள் தங்களது இருசக்கர வாகனங்களை ஆங்காங்கே தாறுமாறாக நிறுத்திச் செல்கின்றனர் விபத்துகளில் சிக்கி உயிருக்கு ஆபத்தான நிலையில் கொண்டு வரப்படும் நோயாளிகளின் ஆம்புலன்ஸ்கள், மருத்துவமனைக்குள் நுழைய முடியாமல் இந்த வாகனங்களால் தடுக்கப்படுகின்றன. மேலும் வாகனங்களை அப்புறப்படுத்த அதிக நேரம் ஆவதால், நோயாளிக்கு உரிய நேரத்தில் முதலுதவி கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது வாகனங்கள் நெருக்கடியாக நிறுத்தப்படுவதால், அப்பகுதியில் நடந்து செல்லும் நோயாளிகள் மற்றும் உறவினர்களுக்கும் விபத்து ஏற்படும் சூழல் நிலவுகிறது. மருத்துவமனை நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் இணைந்து, ஆம்புலன்ஸ் பாதைகளில் வாகனங்கள் நிறுத்துவதை முறைப்படுத்த வேண்டும் என்றும், விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 'உயிர்காக்கும் ஆம்புலன்சுக்கு வழிவிடுவது மனிதநேயம்' என்பதை உணர்ந்து பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.ஆம்புலன்சுக்கு இடையூறாக நிறுத்தப்படும் டூவீலர் வாகனங்கள்..



## மக்கள் நலன் காக்கும் தி.மு.க.வுக்கு வாக்களியுங்கள் பர்கூர் தொகுதி வேட்பாளர் டி.மதியழகன் பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப். 10-

மக்கள் நலன் காக்கும் தி.மு.க. அரசுக்கு வாக்களிக்க வேண்டும் என்று பர்கூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. வலியுறுத்தினார்.பர்கூர் தொகுதிக்குட்பட்ட அரசம்பட்டி, புட்டானூர், ராமாபுரம், தொகரப்பள்ளி, பண்டசீமனூர், பட்லப்பள்ளி, குட்டூர், சிகரலப்பள்ளி உள்ளிட்ட ஊராட்சிகளில் அவர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.அப்போது அவர் பேசியதாவது:கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க. அரசு செயல்படுத்திய நலத்திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைந்துள்ளன. இதனால் எதிர்க்கட்சிகள் அதிருப்தியில் உள்ளன. கடந்த தேர்தலைப் போலவே இம்முறையும் தேர்தல் அறிக்கையில் மக்கள் நலனை மையமாகக் கொண்டு பல்வேறு புதிய திட்டங்களை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அதன்படி, மகளிர் உரிமைத்தொகை ரூ.2,000 ஆக உயர்த்தப்படும். மாணவ, மாணவிகள் பயன்பெறும் ‘தமிழ் புதல்வன்’, ‘புதுமைப் பெண்’ திட்டங்களின் உதவித்தொகை ரூ.1,000 இலிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்படும். மேலும், மக்களுக்கு தேவையான வீட்டு உபயோகப் பொருட்களை வாங்க ரூ.8,000 கூப்பன் வழங்கப்படும்.‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் மூலம் 10 லட்சம் பேருக்கு வீடுகள் கட்டி வழங்கப்படும். முதியோர் ஓய்வூதியம் ரூ.1,500 இலிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை ரூ.2,500 ஆக வழங்கப்படும்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அவர் கூறிய வாக்குறுதிகளை மட்டுமல்லாமல், சொல்லாத பல வாக்குறுதிகளையும் நிறைவேற்றி காட்டியுள்ளார்.

எனவே, மக்கள் நலன் காக்கும் தி.மு.க. அரசுக்கு பொதுமக்கள் ஆதரவு அளித்து வாக்களிக்க வேண்டும். இவ்வாறு டி.மதியழகன் எம்.எல்.ஏ. கூறினார்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள நுண்பார்வையார்களுக்கான (Micro Observers) பயிற்சி தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் அனில் குமார் சிங் (51ஊத்தங்கரை (தனி) (ம) 52பர்கூர்),செளரவ் பாபு சிங்ஹால் (53கிருஷ்ணகிரி (ம) 54வேப்பனஹள்ளி), பண்வே ராகுல் துக்காராம் (55ஒசூர் (ம) 56தளி), மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஹெலன் ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ வத்தலக்குண்டு விறுவீடு பகுதிகளில் திமுக வேட்பாளர் நாகஜோதி அவர்களுக்கு வாக்குகள் சேகரித்தனர் ஒன்றிய செயலாளர் கனிக்குமார் ஒன்றிய செயலாளர் கே பி முருகன் ஒன்றிய செயலாளர் கனகதுறை மற்றும் பலர் கலந்து கொண்டனர்



■ கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, போச்சம்பள்ளி வடக்கு ஒன்றியம், வாடமங்கலம் ஊராட்சி பாமக கட்சியை சேர்ந்த மாநில பொதுக்குழு உறுப்பினர் பழனிவேல் உள்ளிட்ட 10கும் மேற்பட்டோர், கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளர், பர்கூர் தொகுதி திமுக வேட்பாளருமான மதியழகன் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.



■ 178 கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி தாலுகா மற்றும் கரம்பக்குடி சரகம், தீத்தான்விடுதி வருவாய் கிராமம் ஊரணிபுரம் கிராமத்தில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி கறம்பக்குடி வட்டாட்சியர் தலைமையில் இன்று 09.04.2026 நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் தேர்தல் துணை வட்டாட்சியர் திருமதி ஸ்டெல்லா, கரம்பக்குடி வருவாய் ஆய்வாளர் முருகேசன், அலுவலக பணியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், ஊராட்சி மன்ற உதவியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## அதிருப்தியில் NDA கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள்

ராமநாதபுரம், ஏப்.10-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற தனி தொகுதி ழிஞிகி கூட்டணி வேட்பாளராக டாக்டர் முத்தையா போட்டியிடுகிறார் இந்நிலையில் பாஜக நிர்வாகிகளை புறக்கணிப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது பாஜக நிர்வாகிகளையும் தொண்டர்களையும் புறக்கணிக்கும் அதிமுக வேட்பாளருக்கு ஆதரவு தரமாட்டோம் எனவும் வாக்களிக்க மாட்டோம் எனவும் பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மிகுந்த அதிருப்தியில் இருப்பதாக கூறி வருகின்றனர்

# மேற்கு வங்க பிரச்சாரத்தில் மீன் அரசியல்



புதுடெல்லி, ஏப்.10-

மேற்கு வங்க மக்கள் பல நூற்றாண்டுகளாக மீன் உணவுக்குப் பழகி விட்டனர். மேலும், காளி, துர்கா உள்ளிட்ட கடவுள் களுக்கும் மீன் உணவு களைப் படைக்கின்றனர். அங்கு மீன் உணவை சைவமாகக் கருதி உண்ணும் பிராமணர்களும் அதிகம். இந்த மீன் உணவு தேர்தல் பிரச்சாரத்தில் பேசுபொருளாகி உள்ளது.இது குறித்து, முதல்வர் மம்தா பிரச்சாரத்தில் பேசுகையில், "பாஜக ஆட்சிக்கு வந்தால், வங்காள மக்களின் உணவுப் பண்பாடு, குறிப்பாக நமக்கு மிகவும் பிடித்தமான மீன் மற்றும் இறைச்சி உண்ணுவதைத் தடை செய்து விடுவார்கள்" என்றார். இதே கருத்தை திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மற்ற தலைவர்களும் மீன் உணவைப் பயன்படுத்தி பாஜகவை விமர்சிக்கின்றனர்.

இதற்கு பதிலடியாக மீன் உணவைப் புகழ்ந்தும், பாரம்பரியத்தைப் போற்றியும் பாஜக பிரச்சாரம் செய்கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பாஜக வேட்பாளர்கள் மீன் சந்தைகளுக்குச் செல்வதும், மீன் வாங்குவதும், அதைப் பொது வெளியில் உண்பதையும் வழக்கமாக்கி கொண்டுள்ளனர்.மாநில பாஜகவின் மூத்த தலைவரும், கரக்பூர் நகர தொகுதி வேட்பாளருமான திலீப் கோஷ், மீன் உணவு மீதுள்ள ஆர்வத்தை வெளிப்படையாக பிரச்சாரம் செய்து வருகிறார். இவர் பாஜகவின் தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் பிரச்சாரகராக இருந்தவர். சமீபத்தில் திலீப் கோஷ் கரக்பூரில் உள்ள ஒரு மீன் சந்தையில் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடினார்.

அது தொடர்பான புகைப்படங்களையும் அவர் தன் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். பிதான் நகர் தொகுதி வேட்பாளர் சரத்வத் முகர்ஜி சமீபத்தில் ஒரு பெரிய கட்லா மீனை கையில் ஏந்தி வீதிகளில் நடத்திய பிரச்சாரம் வைரலானது. அதேபோல், கொல்கத்தாவை ஒட்டியுள்ள ராஜர் ஹாட்கோபால்பூர் தொகுதி பாஜக வேட்பாளர் தருண் ஜோதி திவாரி, மீன் சந்தைக்குச் சென்று பிரச்சாரம் செய்ததுடன், அங்கே மீன் சாதம் சாப்பிட்டுக் கொண்டே பேட்டியளித்தார்.இதனால் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினரின் தேர்தல் வியூகம் பிசுபிசுத்து வருகிறது. எனினும், மீன் விவகாரத்தில் பாஜக செய்வது போலித்தனம். இதை நம்ப வேண்டாம் என்று ஆளும் திரிணமூல் கட்சியினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர்

# அனைத்து ஜாதி மத சமுதாய மக்களை ஓட்டுக்காக மட்டுமே பயன்படுத்தும் சிட்டிங் அமைச்சர் ராஜ கண்ணப்பன்





ராமநாதபுரம், ஏப்.10-

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தொகுதி மக்கள் முழுமையாக விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் களம் இறங்கினார். யாதவர்கள், முக்குளத்தோர் தேவேந்திர குல வேளாளர் மற்றும் அனைத்து ஜாதி மத சமுதாயத்தினர் நிறைந்த முதுகுளத்தூர் தொகுதியில் அவர்களது முழுமையான ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்றார். பின்பு தி.மு.க.தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையிலும் இன்று வரை இடம் பெற்றுள்ளார்.

ஆனால் அமைச்சர் ராஜகண்ணப்பன் தான் வெற்றி பெற்ற தொகுதி மக்களுக்கு தேவையான எவ்வித திட்டங்களையும் கொண்டு வந்ததாக தெரியவில்லை. இதனிடையே தற்போது 2026 ஏப்.23 ம்தேதி நடக்கவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் மீண்டும் ராஜகண்ணப்பன் களம் இறங்கியிருப்பது தொகுதி மக்களுக்கு அதிர்ப்தியை அதிகப் படுத்தியுள்ளது.

அமைச்சரான ராஜகண்ணப்பன் கூட்டங்களில் பேசுகையில், குறிப்பிட்ட சில திட்டங்களை மட்டுமே செயல்படுத்திவிட்டு பெரும்பாலான திட்டங்களை கொண்டு வந்ததாக மாயாஜாலம் காட்டி பட்டியலிட்டு வருவது அனைத்து தரப்பு மக்களிடமும் அதிர்ப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதில் குறிப்பாக விவசாயத்திற்கு பயன்படும் தண்ணீரை கூட கொண்டு வரமுடியாமல், மலட்டாறு குண்டாறு திட்டம் விரைவில் செயல் படுத்தப்படுமென பேச்சளவிற்கு சொல்லிக் கொண்டே வருவது அனைத்து தரப்பு மக்களுக்கும் ஏமாற்றத்தையும்,அதிர்ப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே ராஜகண்ணப்பன் தொகுதி பக்கம் வந்து தொகுதி மக்களை சந்தித்து கோரிக்கைகளை நிறைவேற்றாதது, சமீபத்தில் நடந்த யாதவர் சமுதாயத்தை சேர்ந்த பள்ளி மாணவி கொலைக்கு எவ்வித கண்டன அறிக்கை வெளியிடாமல் மாணவியின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்காதது யாதவர் சமுதாயத்தினர் மட்டுமின்றி அனைத்து சமுதாய மக்களும் அதிர்ப்தியுடன் காணப் படுகின்றனர்.

மேலும் யாதவர் சமுதாயம் நான் என மார்தட்டிக் கொள்ளும் ராஜகண்ணப்பன் யாதவ சமுதாய மக்களுக்கு உதவிகள் செய்தார் என்றால் அதுவும் இல்லை. தொகுதி மக்கள் அனைவரையும் ஜாதி மத பேதமின்றி ஓட்டுக்காக மட்டுமே பயன்படுத்தும் சாணக்கியனாக செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே தற்போது முதுகுளத்தூர் தொகுதியில் சில கிராமங்களில் ஓட்டு கேட்டு செல்லும் ராஜகண்ணப்பனை விரட்டியடிக்கும் நிகழ்ச்சிகள் சமூக வலைதலங்களில் வைரலாகி வருவதை காணமுடிகிறது.

# மகாராஷ்டிர துணை முதல்வர் சுனேத்ராவுக்கு ரூ.122 கோடி சொத்து சுப்ரியா சுலேவின் ரூ.167 கோடியை விட குறைவு



மும்பை, ஏப்.10-

மகாராஷ்டிர துணை முதல்வராக இருந்த அஜித் பவார், கடந்த ஜனவரி மாதம் விமான விபத்தில் காலமானார். இதனால் அவருடைய பாராமதி சட்டப்பேரவைத் தொகுதி காலியானது.

அஜித் பவார் மறைவுக்குப் பிறகு அவரது மனைவி சுனேத்ரா பவார் தேசியவாத காங்கிரஸ் தலைவரானார். அத்துடன் துணை முதல்வராகவும் பொறுப்பேற்றார். இந்நிலையில், பாராமதி தொகுதிக்கு வரும் 23ம் தேதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சுனேத்ரா போட்டியிடுகிறார்.

சுனேத்ரா பவார் சமீபத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். அதனுடன் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தின்படி, அவருக்கு ரூ.122 கோடி மதிப்பிலான சொத்துகள் உள்ளன. இதன்மூலம் பவார் குடும்பத்தில் அதிக சொத்து மதிப்பு கொண்ட 2வது நபராக இவர் உள்ளது தெரியவந்துள்ளது.

பாராமதி மக்களவை தொகுதி எம்.பி.யும் தேசியவாத காங்கிரஸ் (எஸ்பி) கட்சியின் செயல் தலைவருமான சுப்ரியா சுலே ரூ.167 கோடி சொத்து மதிப்புடன் முதலிடத்தில் உள்ளார். இது அவரது தந்தையும் அக்கட்சியின் தலைவருமான சரத் பவாரின் சொத்து மதிப்பை விட (ரூ.61 கோடி) கிட்டத்தட்ட 3 மடங்கு அதிகம்.



# மேற்கு வங்கத்தில் விதிமீறல் நடந்தால் மறுதேர்தல்: ஆணையம் எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப்.10-

மேற்கு வங்கத்தில் வரும் 23, 29 ஆகிய தேதிதகளில் 2 கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. பொதுவாக அங்கு தேர்தலின்போது வன்முறைச் சம்பவங்கள் அதிகம் நிகழ்வது வழக்கம்.

ஆனால் இந்த முறை தேர்தல் ஆணையம் விதிகளை மிகத் தீவிரமாக அமல்படுத்தத் தயாராகி வருகிறது. விதிகளை மீறினால் மறுதேர்தல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக, வாக்குச்சாவடி அதிகாரிகள் மற்றும் தலைமை அதிகாரிகளுக்குத் தேர்தல் ஆணையம் தெளிவான அறிவுறுத்தலை வழங்கி உள்ளது.

இந்த முறை முதன்முறையாக, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) வசதியுடன் கூடிய சிசிடிவி கேமராக்கள் மூலம் வாக்குச்சாவடிகள் நேரலையாகக் கண்காணிக்கப்படும். கேமராக்கள் அணைக்கப்பட்டாலோ அல்லது சந்தேகத்துக்கு இடமான நடவடிக்கைகள் கண்டறியப்பட்டாலோ உடனடியாக மறு தேர்தலுக்கு உத்தரவிடப்படும் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

# நாட்டின் முதல் கடல் விமானம் ரிஷிகேஷில் வெற்றிகரமாக சோதனை



ரிஷிகேஷ், ஏப்.10-

நாட்டில் முதல் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் நேற்று வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

நாட்டில் கடல் வழித்தடம் மற்றும் நீர்நிலைகள் அதிகளவில் உள்ளன. விமான நிலையம் அமைக்க முடியாத இடங்களில் கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்த திட்டமிடப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக ரிஷிகேஷில் வர்த்தக ரீதியாக கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்த ஸ்கைஹாப் ஏவியேஷன் என்ற நிறுவனம் தயாராகி வருகிறது.

இந்நிறுவனத்தின் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் கடந்த 6ம் தேதி தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்தது. கடல் விமானம் கங்கை நதியில் சுமூகமாக தரையிறங்கி, மேலெழும்பியதன் மூலம் இங்கு கடல் விமான போக்குவரத்து சாத்தியமாகும் எனத் தெரிகிறது.

இது குறித்து ஸ்கைஹாப் ஏவியேஷன் நிறுவனத்தின் நிறுவனர் அவானி சிங் கூறியதாவது: ஸ்கைஹாப் நிறுவனத்தின் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளது.

விமான போக்குவரத்துக்கான சான்றிதழ் பெறும் நடவடிக்கையில் நாங்கள் இறங்கியுள்ளோம். சான்றிதழ் கிடைத்தவுடன் வர்த்தக ரீதியாக நாங்கள் கடல் விமான போக்குவரத்தை தொடங்குவோம்.

லட்சத் தீவு பகுதியிலும் ஸ்கைஹாப் நிறுவனம் கடல் விமான போக்குவரத்தை தொடங்க திட்டமிட்டுள்ளது. இங்கு ஐந்து தீவுகளை இணைக்கும் வகையில் 19 இருக்கைகள் கொண்ட கடல் விமானத்தை முதல் கட்டமாக இயக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# வடசென்னையில் ஆவின் பால் விநியோகம் பாதிப்பு

## தனியார் நிறுவன பாலை அதிக விலை கொடுத்து வாங்கும் பொதுமக்கள்



சென்னை, ஏப்.10-

மாதவரம் பால் பண்ணையில் தொழிலாளர்கள் பற்றக்குறையால், வடசென்னையில் ஆவின் பால் விநியோகம் பாதிக்கப்பட்டது.

மாதவரம் பால் பண்ணையில் இருந்து வடசென்னை பகுதி முழுவதும் ஆவின் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

வடசென்னை பகுதியில் கடந்த சில நாட்களாக, ஆவின் பால் விநியோகம் குறைவாக இருந்ததால், பொதுமக்களுக்கு தேவையான அளவு பால் கிடைக்கவில்லை. கடைகளில் உடனே விற்று தீர்ந்து விடுவதால், பொதுமக்கள் தனியார் பாலை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்நிலையில், வடசென்னை பகுதியில் ஆவின் பால் விநியோகம் நேற்று கடுமையாக பாதிப்படைந்தது. பெரம்பூர், திருவிக நகர், வியாசர்பாடி, கொளத்தூர், கொடுங்கையூர், கொருக்குப்பேட்டை உள்ளிட்ட வடசென்னையின் பல பகுதிகளில் ஆவின் பால் விநியோகம் பாதிக்கப்பட்டது. இதனால், ஆவின் பால் கிடைக்காமல் பொதுமக்கள் சிரமப்பட்டனர்.

குறைந்த அளவிலேயே பால் விநியோகம் செய்யப்பட்டதால், கடைகளுக்கு குறைந்த எண்ணிக்கையிலான பால் பாக்கெட்கள் வழங்கப்பட்டதாக பால் விநியோகஸ்தர்கள் தெரிவித்தனர்.

மாதவரம் பால் பண்ணையில் கடந்த சில நாட்களாக நீடிக்கும் ஆவின் பால் தட்டுப்பாட்டுக்கு, சரியான நடவடிக்கை எடுக்காமல் போனதே இந்த பாதிப்புக்கு காரணம் என, தமிழக பால் முகவர்கள் நலச்சங்க தலைவர் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் மேலும் கூறியதாவது: மாதவரம் பால் பண்ணையில் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் கடந்த மார்ச் 31ம் தேதியுடன் நிறைவடைந்தது.

இதையடுத்து, சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் எடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கே மாதவரம் பால் பண்ணைக்கான ஒப்பந்தம் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரரால் மாதவரம் பால் பண்ணையில் பணிக்கு தேவையான சுமார் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை அனுப்ப இயலவில்லை.

வெறும் 8 பேரை மட்டுமே அனுப்ப முடிந்தது. கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக, ஒப்பந்த தொழிலாளர்கள் பணிக்கு வராததால் வெறும் 8 தொழிலாளர்களை கொண்டு மாதவரம் பால் பண்ணை இயங்கி வந்தது.

இதனால், பால் முகவர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஆவின் பாலை தங்குதடையின்றி விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் மொத்த விநியோகஸ்தர்களின் வாகன ஓட்டுநர்களும், வாகன உதவியாளர்களும் பால் பாக்கெட்டுகளை பால் டப்புகளில் அடுக்கி வாகனங்களில் ஏற்றும் பணிகளை தொடர்ந்து செய்தனர்.

ஆனால், தொழிலாளர்கள் பற்றாகுறையை சரிசெய்ய ஆவின் நிர்வாகம் தரப்பிலிருந்தும், ஒப்பந்ததாரர் தரப்பிலிருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அதே நேரத்தில், வாகன ஓட்டுநர்கள், வாகன உதவியாளர்கள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை.

இதையடுத்து, மாதவரம் பால் பண்ணையில் இருந்து விநியோகம் செய்யப்பட வேண்டிய ஆவின் பால் விநியோகம் சுமார் 60 சதவீதத்துக்கும் மேல் முடங்கியது.

இதனால், ஆவின் பால் கிடைக்காமல் வடசென்னை பகுதி பொதுமக்களும் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். மாதவரம் பால் பண்ணையில் நிலவும் ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# கே.கே.நகரில் அரசியல் பொதுக்கூட்டங்கள் நடத்த எதிர்ப்பு

## வழக்கை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்



சென்னை, ஏப்.10-

சென்னை கே.கே. நகரில் அரசியல் கட்சிகள் சார்பில் பொதுக் கூட்டங்கள் நடத்த அனுமதி வழங்க எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, சென்னை கே.கே.நகர் குடியிருப்போர் நலச் சங்க பொதுச் செயலாளரான ரவிசங்கர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், ``கே.கே.நகர் பகுதியில் குடியிருப்புகள் அதிகம் உள்ளது.

கே.கே.நகர் பகுதியில் அரசியல் கட்சியினர் உரிய அனுமதியின்றி பொதுக் கூட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவதால் பள்ளி செல்லும் மாணவ, மாணவியர், அலுவலகங்களுக்கு செல்வோர், பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும் இதுபோன்ற பொதுக்கூட்டங்களுக்கு அதிக ஒலி எழுப்பும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுவதால் குடியிருப்பாளர்கள் கடும் அவதிக்குள்ளாகி இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

எனவே கே.கே.நகர் பகுதியில் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் நடத்த தடை விதிக்க வேண்டும்'' எனக் கோரியிருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், இந்த வழக்கு கடந்த 2024ம் ஆண்டு நடந்த பொதுக் கூட்டத்தை சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் எங்கு, எப்போது பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதனால் யாருக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது என்பது குறித்து எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.



# மத மூட நம்பிக்கையை நீதிமன்றம் வரையறை செய்யலாம்

## சபரிமலை வழக்கில் நீதிபதிகள் கருத்து

புதுடெல்லி, ஏப்.10-

கேரள மாநிலம் சபரிமலையில் உள்ள ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் வழிபட அனுமதி அளித்து, கடந்த 2018ல் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்த மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல்சாசன அமர்வு விசாரிக்க தொடங்கியுள்ளது.

2வது நாளான நேற்று மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "மத வழக்கங்கள் மூட நம்பிக்கையா என்பதை நீதிமன்றங்கள் முடிவு செய்ய முடியாது. இந்த விவகாரத்தில் நீதிமன்றங்களுக்கு போதிய புலமை இல்லை. மாறாக அந்த மதத்தின் வழிபாட்டு ஆவணங்களை ஆய்வு செய்து தீர்வு காண வேண்டும்" என வாதிட்டார். அப்போது, நீதிபதி ஏ.அமானுல்லா, "மத மூட நம்பிக்கையை உச்ச நீதிமன்றம் வரையறை செய்ய முடியும்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து துஷார் மேத்தா வாதிடுகையில், "அரசுக்கு சொந்தமான கோயில்களில் பூசாரிகளை நியமிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்க முடியாது. கடவுள் நம்பிக்கை அற்ற, கடவுள் நம்பிக்கை உள்ள அரசுகள் கூட கோயில்களில் பூசாரிகளை நியமிக்க முடியாது. கோயில் பூசாரிகள் பாரம்பரியமாக நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். அரசு விவகாரங்களில் மதம் தலையிடாதபோது, மத விவகாரங்களில் அரசும் தலையிடக்கூடாது. அரவிந்தரை பின்பற்றுவோர் ஒரு மதப் பிரிவினராக உள்ளனர்" என்றார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161